### அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

# கழக முப்பெரும் விழாவில் தஞ்சை வடக்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

## தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர் செப்.16 - தஞ்சை வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் 13.09.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் கும்பகோணம் அசூர் பைபாஸ் T.S.மஹால் திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் சு.நஷீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக கும்பகோணம் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

அதனை தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் என்.நடராஜன், ஜெயலெட்சுமி, மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம விஜயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டபிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.

அக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கலைஞரின் கண்மணி, சோழ மண்டல தளகர்த்தர் அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 13.09.2024 அன்று ஆடுதுறையில் நடைபெறும் பிறந்தநாள் பொதுக்கூட்டத்தில் தஞ்சை மாவட்ட பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மற்றும் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளதால் கழக தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு அண்ணன் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்துவது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு தாய் வயிற்றில் அனைவரும் பிறக்கமுடியாது என்பதால் வெவ்வேறு தாய் வயிற்றில் பிறந்தாலும் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற கோட்பாடுடன் தந்தை பெரியார் கண்ட கனவை நிறை வேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 15.09.2024 ஞாயிற்றுகிழமை காலை 8.00 மணியளவில் தாராசுரம் அண்ணா காய்கறி மார்க்கெட்டிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு தாராசுரம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மாநகரத்தில் நகர கழக அலுவலகத்திலும் மற்றும் நமது மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து இடங்களிலும் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்தும் மற்றும் கிளை கழகங்கள்தோறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்திற்கு மலர்மாலை அணிவித்து சிறப்பிப்பது என்று மாநகர, ஒன்றிய, பேரூர் கிளை கழக செயலாளர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழக முப்பெரும் விழா தந்தை பெரியார் அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா, கழகம் தொடங்கிய நாள் முப்பெரும் விழாவாகவும், கூடுதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 100வது ஆண்டு பிறந்தநாள் நிறைவு விழாவாக கழகம் தொடங்கிய சென்னையில் முப்பெரும்விழா நடைபெற இருப்பதாலும், முப்பெரும் விழாவை சிறப்பிக்கும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டத்தின் சார்பில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் அதிக அளவில் பங்கேற்று சிறப்பிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

நமது ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் தளபதி பெயரில் வழங்கப்படும் முதல் விருதை பெரும் முன்னாள் மத்தியநிதித்துறை இணை அமைச்சர், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கத்திற்கு வழங்கியதற்கு கழக தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு 17.09.2024 காலை 8.00 மணியளவில் குடந்தை உழவர் சந்தை அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து சிறப்பிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதில் மாநகர, ஒன்றிய, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

கடந்த 19.04.2024 அன்று நடைபெற்ற 18வது நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வெற்றிபெறுவதற்கு நாற்பதுக்கு நாற்பது என்ற இலக்கை அடைந்ததற்காக அனைத்து தொகுதிகளிலும் சூராவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வாக்கு சேகரித்து வெற்றிக்காக அயராது உழைத்திட்ட கழக தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கும், எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைகளை தமிழக அளவில் மட்டுமல்லாமல் இந்திய அளவில் மக்களை திரும்பி பார்க்கிற வகையில் தேர்தல் பிரச்சாரத்தை நிறைவு செய்து கழகத்திற்கு, கழக வேட்பாளர் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வெற்றிக்கு உறுதுணையாக இருந்தும் மற்றும் ஒற்றை செங்கல்லை காண்பித்து தமிழக மக்களை திரும்பி பார்க்கிற வகையில் தேர்தல் பரப்புரை செய்து நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றிக்கனியை பெற்றுத்தந்த கழக இளைஞர் அணியின் செயலாளர் மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அதுபோல் இந்தியா கூட்டணி சார்பில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்ட இந்திய கூட்டணி கட்சி வேட்பாளரை 271183 (இரண்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து நூற்று என்பத்து மூன்று) வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெறச் செய்ய ஒரு மாத காலத்திற்கு மேலாக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட தேர்தல் பரப்புரை மற்றும் தேர்தல் பணிகளில் அர்பணிப்போடு ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட, தொகுதி, வட்ட, ஒன்றிய கிளை நிர்வாகிகள் தேர்தல் பணி பொறுப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், இளைஞர், மாணவர், கலை இலக்கியம், மகளிர அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் மற்றும் நமது மாவட்டத்திற்குட்பட்ட 3 சட்டமன்ற தொகுதியிலும் தொடர்ந்து சுற்றுபயணம் மேற்கொண்டு வெற்றிக்கு அயராது பாடுபட்ட நமது மாவட்ட பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் மற்றும் தலைமை கழக தொகுதி பொறுப்பாளர்கள், உ.மதிவாணன், S.K.வேதரத்தினம், வண்ணை அரங்கநாதன் மற்றும் நமது கழகத்தின் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, தேர்தல் வாக்குச்சாவடி முகவர்களுக்கும், வாக்களித்த வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் பேரறிஞர் அவர்களால் 1949ம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக்கழகம் தமிழ்நாட்டு மக்களின் நல னுக்காக பல போராட்டங்களை நடத்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை செயல்படுத்தியும் பல சட்டங்களை உருவாக்கியும் இந்தியாவே வழிநடத்தக்கூடிய வகையில் தமிழக மக்கள் பேராதரவுடன் செயல்பட்டு வரும் அரசியல் பேரியக்கத்தின் 75ம் ஆண்டு பவள விழா 2024ம் ஆண்டில் நிறைவினை கொண்டாடுவதால் கழக கொடி கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு கழக மூத்த முன்னோடிகள் கரங்களால் இருவண்ண கொடியை ஏற்றிட செய்தும் நமது கழக தலைவர் வேண்டுகோளின்படி வீதிகள் தோறும் பறக்கும் இருவண்ண கொடியை நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும் என்றும், கழக கொடி பறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை என்றும் வகையில் இல்லங்கள் தோறும் இருவண்ண கொடியை பறக்கவிட்டு சிறப்பிப்போம் என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

குடந்தையின் அடையாளமாகவும் 110 ஆண்டுகளை கடந்து இயல் இசை நாடகங்களை மக்களுக்கு கொண்டு செல்கிற பணியை செய்து வரும் வாணிவிலாசபா பண்முக தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் இரண்டு காட்சிகள் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி புகழ்பெற்ற திரைப்படங்களை ஜுன் மாதம் முதல் பூம்புகார், பராசக்தி, மனோகராவை தொடர்ந்து வருகிற 14.09.2024 அன்று புரட்சி தமிழன் சத்தியராஜ் இளையதிலகம் பிரபு நடித்த கலைஞரின் பாலைவன ரோஜாக்கள் திரைபடம் காலை 11.00 மணி காட்சியும், மாலை 6.00 மணி காட்சியும், வாணி விலாச சபா (விஜயலெட்சுமி திரையரங்கில்) திரையிடப்பட உள்ளதால், மாநகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு திரைப்படங்கள் பார்த்துரசிக்க வேண்டும் என்றும் இந்த ஏற்பாடுகளை செய்த வாணி விலாச சபா தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

கழக தலைவர் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களை ஈர்த்துள்ளதோடு 2030 ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்கா டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாட்டிற்கு ஈர்க்க வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காகவும் அமெரிக்க வாழ் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழ் சங்கங்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த தமிழக முதல்வர் கழக தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் TRB.ராஜா அவர்களுக்கும் வெளிநாடு பயணம் வெற்றிபெற வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

வருகிற 17.09.2024 மாலை 5.00 மணியளவில் சென்னை, நந்தனம் YMC திடலில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் தந்தை பெரியார் விருது திருமதி பாப்பம்மாள், அண்ணா விருது அறந்தாங்கி மிசா இராமநாதன், கலைஞர் விருது S.ஜெகத்ரட்சகன், பாவேந்தர் விருது கவிஞர் தமிழ்தாசன், பேராசிரியர் விருது வி.பி.ராஜன்க்கும் மற்றும முதன் முதலாக நம்முடைய கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் பெயரிலான விருதை பெரும் முன்னாள் மத்திய அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் Ex.MP அவர்களுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு கழக மூத்த முன்னோடிகள் ஒன்றிய நகரம், பகுதி, பேரூர் கழக செயலாளராக பணியாற்றி சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பண முடிப்பு வழங்கும் வழங்கும் கழக தலைவர்க்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்தும், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் அதிக அளவில் பங்கேற்று சிறப்பிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

நமது தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட 12 ஒன்றியங்கள் மற்றும் 12 பேரூர் கழகங்கள் 4 பகுதிகளிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதுபோல் கிளை கழகங்கள், வார்டு கழகங்கள் தோறும் செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவதுடன் மற்றும் சார்பு அணி அமைப்பாளகள், சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம் நடத்தியும் சிறப்பிக்க வேண்டும் என்றும், மற்றும் திராவிட மாடல் அரசை திறம்பட நடத்தி இந்தியாவே திரும்பி பார்க்க வைக்கும் திட்டங்களை நிறைவேற்றி வரும் கழக முதல்வர் தளபதி அவர்களின் மக்கள் நல திட்டங்களை சுவர் விளம்பரம் எழுதி சிறப்பித்தும் மற்றும் மாவட்டம் முழுவதும் தெருமுனை கூட்டங்களை நடத்தி விளக்குவது என்றும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சமூக நீதிக்காக அரும்பாடுபட்ட தலைவரும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போரடியவரும், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்தவரும், தனது எழுத்து மற்றும் பேச்சுகளின் மூலம் உலகமெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய அனைத்து நூல்களையும் தமிழ்நாடு அரசு சார்பில முதன் முறையாக நூலுரிமைத்தொகை ஏதுமின்றி நாட்டுடமையாக்கிய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் இக்கூட்டம் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களால் அமைக்கப்பட்ட தி.மு.க ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு நமது மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் தங்கள் பகுதியில் ஒரே நபர் இரண்டு நிர்வாக பொறுப்புகளை வைத்து இருப்பவர்கள் பட்டியலை வழங்கி தாமாக முன்வந்து ஒரு பொறுப்பில் விலகி அடுத்தவர்களுக்கு வாய்ப்புகள் வழங்க உதவிடுமாறும், அதைபோல் நமது மாவட்டத்தில் உள்ள 23 சார்பு அணிகளுக்கும் இதுவரை நியமிக்கப்படாமல் உள்ள மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு தகுதியான அந்த அணிக்கு தொடர்புடைய நபர்களையும் மற்றும் கழகத்தில் எவ்வித பொறுப்பும் இல்லாமல் இருப்பவர்களை கண்டறிந்து பட்டியல் தயார் செய்தும், அதுபோல் தகவல் தொழில்நுட்ப அணிக்கு மூன்று தொகுதிகளிலும் பாகங்களுக்கு ஒரு நபர் நியமித்து உடனடியாக மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறது.

தற்போது இந்திய தேர்தல் ஆணையத்தால் புதிய முறையில் வாக்காளர் சேர்க்கும் அலுவலர் இல்லங்கள் தோறும் சென்று புதிய வாக்காளர்களை 18 வயது நிறைவடைந்த வர்கள் விபரங்களை சேகரிக்கும் பொழுதும் மற்றும் வெளியூர் சென்றவர்கள், வெளிநாடு சென்றவர்கள் மற்றும் இறந்த வாக்காளர்கள் விபரங்களை வரும் அலுவலரிடம் முறையாக எடுத்துக்கூறுவதற்கு இளம் வாக்காளர்களுக்கும், பொது மக்களுக்கும் உதவியாய், புதிய வாக்காளர்களை அதிக அளவில் சேர்க்க உதவிட வேண்டுமாய் ஒன்றிய, நகர, பேரூர், பகுதி செயலாளர்கள் உரிய நபர்களை நியமிக்க வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு தீர்மானம்

2021ம் ஆண்டு சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்று, அதனை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக மிக சிறப்பாக பணியாற்றியும், நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அயராது உழைப்பும், தொண்டுள்ளம் கொண்டு 40க்கு 40 வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாநில இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக்க கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு

1. பூர்த்தி செய்த OMR படிவங்கள் இதுவரை ஒப்படைக்காதவர்கள் விரைவில் ஒப்படைப்பது டன், இன்று OMR படிவங்களை எடுத்து வந்தவர்கள் மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

2. ஒன்றிய, பேரூர், பகுதிகளில் உள்ள கொடிமரங்கள் விபரம் இதுவரை கொடுக்காதவர்கள் தட்டச்சு செய்து கொடுப்பதுடன், கழக கொடியேற்றுவதற்கான சுற்று பயண விபரத்தையும் வழங்கவும்.

3. மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலார்கள் தங்கள் பகுதியில் கழக பொது உறுப்பினர் கூட்டம் நடத்தி முடித்த மினிட் புத்தகத்தை எடுத்து வந்தவர்கள் மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.



தர்மபுரி மாவட்டம் அரூர் நகரில் கழக பவள விழாவையொட்டி அரூர் நகரக் கழக நிர்வாகிகளுக்கு கழக இருவண்ண கொடியை நகரக் கழகச் செயலாளர் முல்லைரவி வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் செ.கிருஷ்ணகுமார், நகர துணைச் செயலாளர் செல்வதயாளன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

## தி.மு.கழகம் ஒரு தீயணைக்கும் படை!



தி.மு.கழகம் ஒரு தீயணைக்கும் படை. தீயணைக்கும் படை, வேண்டியவர் வீடு - வேண்டாதவர் வீடு பார்த்துத் தீயை அணைப்பதில்லை; யார் வீடாக இருந்தாலும் தீயை அணைக்கிறது. அதுபோல, தீயவை அழிக்க தி.மு.கழகம் துடிதுடித்து வரும். அதனால்தான் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து, அந்த விஷயத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதாகக் கூறினோம். ஜனநாயகம் எங்கு பாழ்படுத்தப்படுகிறதோ, அங்கு துடிதுடித்துப் பாய்ந்து உதவிக்கு வருகிறது தி.மு.கழகம்!

- அண்ணா



கிளியனூர் ஒன்றியம், நல்லாவூர் கிளை செயலாளர் ஜெயராமன் மகள் திருமண வரவேற்பு விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் கிளியனூர் ராஜீ, .பி.கே.டி முரளி, ஒன்றியக் குழு துணைத் தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் வினோபாரதி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சக்தி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மஞ்சக்கரை என்.எம்.பிரபு முத்துராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## அறந்தாங்கி ஒன்றியம் - பெருங்காடு பஞ்சாயத்து தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா!

புதுக்கோட்டை, செப். 16 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி தொகுதி அறந்தாங்கி ஊராட்சி தெற்கு ஒன்றியம் பெருங்காடு பஞ்சாயத்து திமுக முப்பெரும் விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு கழக்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (16.09.2024 - திங்கள் கிழமை ) காலை 9 மணி அளவில் கூத்தங்குடி பேருந்து நிலையம் அருகில் மஞ்சக்கரை என்.எம்.பிரபு முத்துராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அறிவுறுத்தலின்படி அறந்தாங்கி தெற்கு ஒன்றிய செயலாளர் பொன் கணேசன் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் வி.சிவசுப்பிரமணியன், ( கழக மூத்த முன்னோடி ) கிளைச் செயலாளர்கள் ஏ. வீரைய்யா, வீர. சிவசங்கர், கே. தங்கராஜ், பெருங்காடு ஊராட்சி மன்ற தலைவர் எஸ். மல்லிகா, தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஆர். முத்துக்கிருஷ்ணன், இளைஞர் அணி எம். கார்த்திக் மற்றும் மாவட்ட ஒன்றிய பெருங்காடு ஊராட்சி ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி மகளிர் அணி மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு: மஞ்சக்கரை என்.எம்.பிரபு முத்துராஜ் .

### வார்டுச் செயலாளர் கே.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## திண்டிவனம் நகரம் 14 வது வார்டில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

### எம்.எல்.பி.கோபிநாத் தலைமை! வி.முருகன் வரவேற்புரை! எம்.குப்புசாமி முன்னிலை!

திண்டிவனம், செப். 16 விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளை தி.மு.க. சார்பில் காஞ்சி தந்த காவியத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வார்டுக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் திண்டிவனம், செஞ்சி சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.எல்.பி.கோபிநாத் தலைமை வகித்தார்.

மாவட்ட பிரதிநிதி வி.எஸ்.முருகன் எம்.சி. வரவேற்புரை ஆற்றினார். விழுப்புரம் வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் ஆசிரியர் எம்.குப்புசாமி முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளர்கள் வெண்ணிலா என்.கபிலன், முன்னாள் நகரக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் திண்டிவனம் கே. அசோகன் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் நகரக் கழகப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், கோவிந்தாபுரம் ஏ.கே.சீத்தாராமன், நகர மன்ற உறுப்பினர்கள் எம்.குணசேகரன், ஜி.சத்தீஷ், ஜெ. சரவணன், முன்னாள் நகர பொருளாளர் எஸ்.ஜாபர் பேக், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி.ராஜேஷ், சேகர், எஸ்.ஜெகபதி, ராமசாமி, அன்பு, வேதமூர்த்தி, பெரியசாமி, முத்து, ராஜேந்திரன், சிவப்பிரகாசம், சலீம் கான், கே.கே.தாஸ், எம். ராஜசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 14 வது வார்டுக் கிளைக் கழகச் செயலாளர் கே. ராஜேந்திரன் செய்திருந்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளை தி.மு.க. சார்பில் காஞ்சி தந்த காவியத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வார்டுக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் திண்டிவனம், செஞ்சி சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.எல்.பி.கோபிநாத் தலைமை வகித்தார். வி.எஸ்.முருகன் எம்.சி. வரவேற்புரை ஆற்றினார். ஆசிரியர் எம்.குப்புசாமி முன்னிலை வகித்தார். வெண்ணிலா என்.கபிலன், வழக்கறிஞர் திண்டிவனம் கே.அசோகன் சின்னா கே.ராஜேந்திரன், கோவிந்தாபுரம் ஏ.கே.சீத்தாராமன், எம்.குணசேகரன், ஜி.சத்தீஷ், ஜெ.சரவணன், எஸ்.ஜாபர் பேக், எல்.ஐ.சி.ராஜேஷ், சேகர், எஸ்.ஜெகபதி, ராமசாமி, அன்பு, வேதமூர்த்தி, பெரியசாமி, முத்து, ராஜேந்திரன், சிவப்பிரகாசம், சலீம் கான், கே.கே.தாஸ், எம். ராஜசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.